

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (7.7.2025) தலைமைச் செயலகத்தில், போக்குவரத்துத் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன். மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று 7.7.2025) தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்ப வியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், , மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### “கல்லூரிப் பேராசிரியர்கள் நியமனம் மற்றும் முதல்வர்கள் பதவி உயர்வு!

# அரசு முறையான நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது!

## உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் பதில்!



சென்னை, ஜூலை.8-

அரசு கல்லூரிகளில் முதல்வர்கள் மற்றும் பேராசிரியர்கள் காலிப்பணியிடங்கள் குறித்து சமீபத்தில் நாளேடுகளில் வரப்பெற்றுள்ள செய்திகள், இது குறித்து அமைச்சர் கோவி. செழியன் அளித்துள்ள விளக்கம் வருமாறு:-

தமிழ்நாட்டில் மொத்தம் 180 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இந்த கல்வியாண்டில் மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி கல்லூரிகளே இல்லாத பகுதிகளில் புதியதாக 15 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. அனுமதிக்கப்பட்ட கல்லூரி பேராசிரியர்கள் பணியிடங்கள் குறித்தும் நிரப்பபட்ட முதல்வர்கள் குறித்தும் முற்றிலும் தவறான செய்திகள் வெளியிடப்பட்டுள்ளது. உதாரணமாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1,500 பேராசிரியர்கள் மட்டுமே உள்ளனர் என செய்தி வரப்பெற்றுள்ளது. ஆனால், உண்மையில் 4,711 பேராசிரியர்கள் நிரந்தரமாக பணியாற்றி வருகின்றனர். 9,000 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளது என தெரிவித்துள்ளதும் தவறானதாகும். காலிப்பணியிடங்களில் கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு மாணவர்களின் கல்வி பாதிக்காமல் இருக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலிப்பணியிடங்கள் ஏற்பட்டதன் பின்னணி பின்வருமாறு:-

2015ஆம் ஆண்டிற்கு பிறகு ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்படாததால் இந்த காலிப்பணியிடங்கள் ஏற்பட்டுள்ளன. இதனை சரி செய்ய இவ்வரசு பொறுப்பேற்றவுடன் 4,000 ஆசிரியர் பணியிடங்களை அரசு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்பிட ஆணை வெளியிடப்பட்டது. பல்வேறு நிலையில் இதன்மீது 54 வழக்குகள் தொடரப்பட்டதால் நாளது வரை மேற்படி பணியிடங்கள் நிரப்பிட காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. வழக்குகளை விரைவில் முடித்து மேற்படி காலிப்பணியிடங்களை நிரப்பிட உரிய சட்ட பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பல்வேறு வழக்குகளால் நிரந்தர உதவிப் பேராசிரியர்களை தேர்வு செய்ய காலதாமதம் ஆகும் நிலையிலும், மாணவர்களின் கல்வி நலன் கருதி கௌரவ விரிவுரையாளர்கள் காலிப்பணியிடங்களில் நிரப்பப்பட்டு, கல்வி பணியாற்றி வருகின்றனர். மேலும், தற்போது சுமார் 800 பணியிடங்களில் கௌரவ விரிவுரையாளர்களை நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் மாணவர்களுக்கு உயர்கல்விச் சேவை எந்த வகையிலும் தமிழ்நாட்டில் பாதிக்கப்படவில்லை.

கல்லூரி முதல்வர்கள் நிலை குறித்து:

உயர்கல்வித் துறையின் கீழ் செயல்படும் 58 நிலைI அரசு கல்லூரிகளில் 46 நிரந்தர முதல்வர்கள் பணியாற்றி வருகின்றனர். இதில் காலியாக உள்ள 12 முதல்வர் பணியிடங்களில், ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட பட்டியல் (APPROVED PANEL) மற்றும் அடுத்து தெரிவு செய்யப்பட உள்ள பட்டியலிலிருந்து முதல்வர்களை பதவி உயர்வு மூலம் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1998ஆம் ஆண்டு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தெரிவு செய்யப்பட்டவர்களின் பணிமூப்புப் பட்டியல் 2023 இல் வெளியிடப்பட்டது. அப்பணிமூப்புப் பட்டியலை ஏற்றுக்கொள்ளாமல் ஆசிரியர்கள் வழக்கு (WP எண் 20170/2023) தொடுத்து தடையாணை பெற்றுள்ளனர். இதன் காரணமாக கல்லூரி முதல்வர்கள் பதவி உயர்வு வழங்குவதில் அரசுக்கு தாமதமாகி உள்ளது.

இவ்வழக்கில் எதிர்உறுதி ஆவணம் உடனடியாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன் மீதான இறுதி ஆணை இதுவரை நீதிமன்றத்தால் வெளியிடவில்லை. வழக்கினை விரைந்து முடித்திட சட்ட ரீதியான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வழக்கு முடிவுக்கு வந்தவுடன் காலியாக உள்ள கல்லூரிகளில் முதல்வர்கள் பணியமர்த்தப்படுவார்கள். எனினும் கல்லூரியின் நிர்வாக நலன் மற்றும் மாணவர்கள் நலன் கருதி, முதல்வர் பணியிடம் காலியாக உள்ள கல்லூரிகளில் கல்லூரியின் மூத்த பேராசிரியர்கள் முதல்வர்களாக முழு கூடுதல் பொறுப்பில் நியமிக்கப்பட்டு சிறப்பாக பணியாற்றி வருகின்றனர்.

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில் பரவலாக உயர்கல்வி பயிலும் வாய்ப்புகள், ஆராய்ச்சிப் படிப்புகள், புதிய முயற்சிகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல், “நான் முதல்வன்” திட்டத்தின் மூலம் தகுதி வாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல் ஆகியவற்றில் தீவிரமான கவனம் செலுத்தப்பட்டு பல்வேறு சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த 4 ஆண்டுகளில் 41 இலட்சம் மாணாக்கர்கள் “நான் முதல்வன்” திட்டத்தின் வாயிலாக பயன் பெற்றுள்ளனர். மேலும், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர்கல்வி பயிலப் “புதுமைப் பெண்” திட்டம் மற்றும் மாணவர்கள் உயர்கல்வி பயிலப் ”தமிழ்ப் புதல்வன்” திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் மாதம் ரூ. 1,000/ உதவித்தொகை வழங்குதல், முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்குச் சலுகைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு முன்னோடி திட்டங்களையும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்விச் சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது. ஒன்றிய அரசின் உயர்கல்வியில் நிதி ஓரவஞ்சனைக்கு பின்னரும் பலவித தடைகளையும் தாண்டி தமிழ்நாட்டு மாணவர்களுக்கு உயர்கல்வி சிறப்பாக வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### வர இருக்கின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில்

# களப்பணியில் கழக வழக்கறிஞர்கள் தீவிரமாகப் பணியாற்றுவோம்!

## மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் நடைபெற்ற கழக சட்டத்துறை கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஜூலை 8-

தி.மு.க. சட்டத்துறை மாநில நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம், சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள சட்டத்துறை அலுவலகத்தில், சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என். ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சட்டத் துறை மாநில நிர்வாகிகள், கே.எஸ்.இரவிச்சந்திரன், கே.பச்சை ப்பன், சு.இராதாகிருட்டிணன், சூர்யா வெற்றி கொண்டான், சு.அருள்மொழி, பெ.இரகு, என்.மருதுகணேஷ், பொன்.சந்திரபோஸ், கேமறைமலை, மீஞ்சூர் கே.சுரேஷ், க.வீ.கணேஷ், கே.ஜெ.சரவணன், மதுரை கலாநிதி, சு.வை. சுரேஷ், ராஜா முகமது, தூத்துக்குடி மனோஜ், நாகை தினேஷ் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**இரங்கல் தீர்மானம்!**

சட்டத்துறை இணைச்செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன் அவர்களின் சகோதரரும், முன்னாள் தொண்டர் படை நிர்வாகியும், கழகத்தின் மூத்த முன்னோடியுமான கே.எஸ். அய்யாவு என்கிற கே.எஸ். ராமச்சந்திரன் (வயது 68) அவர்கள் கடந்த 4.07.2025 உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார். அன்னாரின் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இரண்டு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

**அண்ணா அறிவாலயத்தில் ஆலோசனைக் கூட்டம்!**

இந்திய தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் சம்பந்தமாக அடிக்கடி கொண்டு வரும் பல்வேறு மாற்றங்களை அறிந்து அவற்றிற்கேற்ற வகையில் களப்பணியாற்றிட நமது வழக்கறிஞர் அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பகுதி ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோரின் ஆலோசனை கூட்டம் வருகின்ற 26.07.2025, அன்று காலை 10 மணிக்கு சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடத்துவது என்று முடிவு தீர்மானிக்கப்பட்டது.

வர இருக்கின்ற 2026 சட்டமன்ற தேர்தல் களப்பணியில் கழக வழக்கறிஞர்கள் தீவிரமாக பணியாற்றுவதற்கு ஏற்ற வகையில் மண்டல வாரியாக பயிற்சி கருத்தரங்குகள் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

மேற்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் திருவள்ளூர் மற்றும் திருத்தணி தொகுதிக்குட்பட்ட BLA 2 பாக முகவர்கள் ஆலோசனைகூட்டம் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது இதில் கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்துபல்வேறு ஆலோசனை வழங்கி பேசினர். உடன் வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ., தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, தொகுதி பார்வையாளர்கள் பெ.சேகர், சண்முகநாதன், நிர்வாகிகள் கே.திராவிடபக்தன், ஒ.ஏ.நாகலிங்கம், குருதாஸ், உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, ப.சிட்டிபாபு, கே.என்.சுப்பிரமணி, ஒன்றிய செயலாளர்கள் அன்பரசு, ஆர்த்தி ரவி, உள்பட ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் BLA2 பாக முகவர்கள் உள்ளனர்.

### மதுரை மாநகராட்சியின்

# அனைத்து மண்டலத் தலைவர்களும் ராஜினாமா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அதிரடி உத்தரவு!

சென்னை, ஜூலை.8-

மதுரை மாநகராட்சியின் அனைத்து மண்டலத் தலைவர்களையும் ராஜினாமா செய்யச் சொல்லி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பான அரசு செய்தி வெளியீடு வருமாறு :

**முதலமைச்சர் அதிரடி - மதுரை மாநகரில் மேயரின் கணவர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டதைத் தொடர்ந்து மாநகராட்சியின் அனைத்து மண்டல தலைவர்களையும் ராஜினாமா செய்யச் சொல்லி முதலமைச்சர் உத்தரவு.**

**கட்சி நிர்வாகிகளுடனான ஒன் - டூ - ஒன் ‘உடன்பிறப்பே வா’ நிகழ்ச்சியின் போது தேவையான இடங்களில் தயவு தாட்சண்யமின்றி பதவியைப் பறிப்பேன் என முதலமைச்சர் தெரிவித்திருந்தார்.**

இவ்வாறு அப்பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

கன்னியாகுமரி கிழக்கு மற்றும் கன்னியாகுமரி மேற்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 12.07.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | கன்னியாகுமரி கிழக்கு | மாவட்டக் கழக அலுவலகம், ஒழுகினசேரி, நாகர்கோவில். |
| | மாலை 3.00 மணி | கன்னியாகுமரி மேற்கு | எம்.கே.ஆடிட்டோரியம், வேர்கிளம்பி. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்–9–இல் கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு மற்றும் திருநெல்வேலி கிழக்கு ஆகிய மாவட்டங்களில் உள்ள சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் சமூக வலைத்தளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 13.07.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | நாகர்கோவில் | மாவட்டக் கழக அலுவலகம், ஒழுகினசேரி, நாகர்கோவில். |
| | மாலை 4.00 மணி | பத்மநாபபுரம் | எம்.கே.ஆடிட்டோரியம், வேர்கிளம்பி. |
| 19.07.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | ராதாபுரம் | எம்.எஸ்.மகால், வள்ளியூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 07.07.2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி




காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், காட்டாங்குளத்தூர் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் ஒன்றிய பொறுப்பாளர் கே.பி.ராஜன் தலைமையில் நடைபெற்ற ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு உரையாற்றினார். அருகில் செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், நகரச் செயலாளர்கள் ஜெ.சண்முகம், எம்.கே.டி.கார்த்திக் தண்டபாணி, உதயா கருணாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.